This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# ஆஸ்டின் இல்லம்

**சா**யங்காலம் மரங்களில் மின்சாரப் பழங்கள் பழுக்க பாண்டு வாத்யக்காரர்கள்தான் முதலில் வந்து தத்தம் உறைகளைக் கழற்றினார்கள். ஓரத்தில் விருந்து சாப்பாட்டை சூடாக வைக்க, பாத்திரங்களின் அடியில் தற்காலிக நீல நெருப்புகளை ஒரு சிப்பந்தி உயிர்பிக்க, மற்றிருவர் பிளாஸ்டிக் போர்டில் 'நிகில்' என்பதற்குரிய எழுத்துக்களைப் பொருத்தினார்கள்.

ஆஸ்டின் பெரியப்பாதான் முதலில் வந்தார். சொல்ப மயிரை படிய வாரி 'உன் குட்டு எனக்குத் தெரியும்' என்று சொல்லும் சாஸ்வதப் புன்னகை. வயசு மீறிய உற்சாக நடையில் வெற்றியின் அடையாளம். அவர் ஆரம்ப காலத்தில் ஒரு ஆஸ்டின் வைத்திருந்தாராம் A40 அப்போது வாய்த்த பெயர். இப்போ காண்டெஸ்ஸா, டோயோட்டா, மாருதி 1000 எல்லாம் வந்த பின்னும் மாறவில்லை. அவர்தான் குடும்பத்தில் முதல் முதல் கார் வாங்கினவர். அதுவரை குடும்பம் வெற்றிலை வியாபாரம், ஜவுளி, கரி பஸ் என்று கீழ் மத்திய வர்க்கமாக இருந்தது. ஆஸ்டின் பெரியப்பா முதன் முதலாக பிரஸ் வைத்து 'ஜமதக்கினி' என்று பத்திரிக்கை ஆரம்பித்து நொடித்துப் போய், எட்டு இஷ்யு கூட வராமல் வாக்கிய பஞ்சாங்கம் அடித்துப் பார்த்தார். பல பாஷையில் நோட்டீஸ் அச்சடித்துப் பெயின்பாம் பண்ணிப் பார்த்தார். அதும் சரிப்படாமல் பிரஸ்ஸை விற்று மசித் தொழிற்சாலை வைத்து மனைவியின் பெயரை மசிக்குக் கொடுத்து அதிலிருந்து ஸ்டேஷனரி அயிட்டங்கள். ப்ளேட் கிளாஸ். பார்டிக்கிள் போர்டு சினிமா தியேட்டர், மாவுமில், ஷாப்பிங் காம்ளெக்ஸ் என்று விஸ்தரித்து இப்போது ஸாட்டிலைட் டி.வி. வீடியோ, டிஸ்க் கம்யூட்டர், படிப்புக்கு ஃப்ரான்சைஸ் என்று பெருகிவிட்ட ஒன்பது தொழில் நிறுவனங்கள் இருந்தாலும் சாஸ்திரத்துக்கு ரேவதி மசி வருசம் நூறு பாட்டில் பண்ணி சொந்த ஊரான திருக்காட்டுப்பள்ளிப் பிள்ளைகளுக்கு இலசவமாக அனுப்புகிறார். சென்டிமெண்டாக அருகே அவர் கிராமத்தில் உள்ள முத்துமாரியம்மன் கோவிலுக்கு டியூப் லைட் முதற்கொண்டு சர்வ வஸ்துகளும் மான்யமும் கொடுத்திருக்கிறார்.

ரேவதி மஞ்சள் காமாலையில் இறந்துபோய் அவள் தங்கை குணவதியைக் கல்யாணம் பண்ணிக்கொண்டார். அவள் மூலம் பிறந்த முகுந்தனின் பிள்ளை, நாளை அமெரிக்கா போகும் நிகில். அவனுக்குத்தான் பார்ட்டி. ரேவதி மூலமாக அவருக்கு மூன்று பெண்களும், ஒரு பையனும், ராஜேஸ்வரி, மகேஸ்வரி, காமேஸ்வரி என்று. பையன் பேர் சிவானந்தம். இத்தனை பேரை பார்த்துக் கொள்ளத்தான் ரெண்டாம் கல்யாணம் (சிவானந்தத்தின் மனைவி மாலதி வரவில்லை) பண்ணிக் கொண்டதாக சொன்னாலும் ரேவதி உயிரோடு இருக்கும்போதே ஏற்பாடுகள் ஆரம்பித்தது நிசம். முகுந்தன் இரண்டாம்தாரம் குணாவின் ஒரே பையன். அவனுக்கு ஆஸ்டின் பெரியப்பாவின் அக்கா பெண் பானுமதியைக் கல்யாணம் பண்ணிவைத்து அவர்களுக்கு இரண்டு பெண் சுதா, வசந்தி, அடுத்தது பையன் நிகில். அதன்பிறகு ரொம்ப வருஷம் கழித்து நந்து பெரியப்பாவின் கண்மணிப் பேரன். இப்படி ஒன்றுக்கு ஒன்று உறவைவிட்டு வெளியே போகாமல் (ராஜேஸ்வரியின் பெண் நித்யாவை நிகிலுக்கு நிச்சயம் பண்ணிவிட்டுதான் போக வேண்டும் என்று சொல்கிறார்கள்) ஏகப்பட்ட பேரன் பேத்திகளாக பெரியப்பாவுக்கே தலைசுற்றும். யாரையாவது பார்த்தால் யார்ரா நீ? ராஜி பையனா, மகேஸ் பொண்ணா? உம் பேரு பாலாஜிதானே என்று போட்டுக் குழம்புவார். இன்பமான குழப்பம் நிரம்பித் ததும்பும் குடத்தின் உற்சாகம். இது போதாதென்று பெரியப்பா